
# திராவிடத்தால் வாழ்கிறோம்

916

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

---

**இது பெரியார் மண்**

ர.பிரகாசு

# 21 தொண்டர்களுக்கும் வரலாறு உண்டு!


ஓவியம் : சிகரன்

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

1948-ஆம் ஆண்டு அக்டோபர் 23, 24-இல் ஈரோட்டில் நடைபெற்ற தனி (ஸ்பெஷல்) மாநாடு திராவிட இயக்க வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. அதற்கு முன்பு நடைபெற்ற தூத்துக்குடி மாநாட்டில் அண்ணா கலந்துகொள்ளாதது பெரும்புயலைக் கிளப்பியிருந்தது. ஆனால், ஈரோடு மாநாட்டில் செங்காளைகள் பூட்டப்பட்ட சாரட்டில் அண்ணாவை அமரவைத்து, பேரணியின் முன்னே நடந்துவந்தார் பெரியார். அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி பங்கேற்ற கடைசி மாநாடு அதுதான்.

காங்கிரஸை விட்டு பெரியார் வெளியேறிய, காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக இருந்த திரு.வி.க., ஈரோடு மாநாட்டில் இந்தித் திணிப்புக்கு எதிராக இடியாக முழங்கினார். 'தூக்குமேடை' நாடகத்தை நடத்திவிட்டு, வழிச்செலவுக்கு பெரியாரிடம் காசு வாங்குவதற்கு படாத பாடுபட்டேன் என **'நெஞ்சுக்கு நீதி'**யில் கலைஞர் சுவாரஸ்யமாக எழுதியதும் இந்த மாநாட்டைப் பற்றித்தான்.

இப்படி தலைவர்களைப் பற்றி சொல்ல இத்தனை வரலாறு இந்த மாநாட்டிற்குள் புதைந்திருக்கிறது என்றால், பங்கேற்ற ஐம்பதாயிரம் தொண்டர்களைப் பற்றிய வரலாறுகள் எத்தனை எத்தனை இருக்கும்? எண்ணிப் பார்க்கவே மலைப்பை ஏற்படுத்தும் அந்த வரலாற்றின் ஒரு துளிதான் சாமிநாதன்.

திருச்சி மாவட்டம், லால்குடியில் உள்ள பெருவளப்பூர் இவரது சொந்த ஊர். பெரியார் மீது தீவிரப் பற்றுகொண்டவர். ஈரோடு மாநாட்டிற்குச் செல்ல விரும்பிய இவர், தாய் தனக்காக சேர்த்து வைத்திருந்த பணத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். அங்கிருந்து 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பிரதான சாலையை நடந்தே அடைந்தார். சாலையில் போகிற வாகனத்தை நிறுத்தி, சேலம் சென்று, அங்கிருந்து ஈரோட்டுக்குச் செல்வது அவரது திட்டம்.

குச்சி ஒன்றை எடுத்து, அதில் கருப்புத்துணியைக் கட்டி, சாலையில் வரும் வாகனத்தை நிறுத்த முயற்சித்தார். ஆனால், எதிர்பாராத விதமாக அப்படியே நின்றது பெரியாரின் வாகனம். ஈரோடு மாநாட்டிற்குச் சென்று கொண்டிருந்த பெரியார், வழிமறித்த சாமிநாதனிடம் விவரம் கேட்டு, வாகனத்தில் ஏற்றிக்கொண்டார். 2 நாள் மாநாட்டிலும் முழுமையாகப் பங்கேற்ற சாமிநாதன், மாநாடு முடிந்ததும், மீண்டும் சென்று பெரியாரிடம் நின்றார். ஊருக்குத் திரும்ப வேண்டுமல்லவா!

திரும்ப வரும்போது பெரிய மூட்டையை கையில் வைத்திருந்ததைப் பார்த்த பெரியார், செல்லும் வழியில் சாமிநாதனிடம் விசாரித்தார். "அய்யா மாநாட்டுக்கு வரும்போது 19 ரூபாய் எடுத்துட்டு வந்தேன். அந்த காசுக்கெல்லாம் புத்தகம் வாங்கியிருக்கிறேன்" என்றார் சாமிநாதன். கால் சவரன் நகை 24 ரூபாய்க்கு விற்ற காலம் அது. இன்றைய மதிப்பில் சுமார் 20,000 ரூபாய். இவ்வளவு பணத்திற்கும் புத்தகம் வாங்கியிருக்கிறாரே என பெரியார் அவரை மனதாரப் பாராட்டினார். மீண்டும் ஊருக்குச் செல்வதற்கு பணம் உள்ளதா? எவ்வளவு செலவாகும்? என்றும் விசாரித்தார் பெரியார். '6 அணா தேவைப்படும் அய்யா' என்று சாமிநாதன் கூறினார். ஆனால், 12 அணா கொடுத்து அனுப்பிவைத்தார் பெரியார்.

பெரியாருடனே சென்று, அவரிடமே வழிச்செலவுக்கும் பணம் வாங்கி அந்த பெரியாரின் பெருந்தொண்டர் சாமிநாதன் பெருவளப்பூரில் செய்த புரட்சி கொஞ்ச நஞ்சமல்ல. சாதி ஆதிக்கத்தை சம்மட்டியால் அடித்த சாமிநாதனின் செயற்கரிய செயல்களால், 'சாமிநாதபுரம்' என்றே ஒரு பகுதி பெருவளப்பூரில் நிலைபெற்றிருக்கிறது.

அந்த வரலாற்றைத் தோண்டி, பயணம் தொடரும்...

...பயணிப்போம்.

## ராணுவத்தில் புகுத்தப்படும் சமஸ்கிருதம்!

பாரதிய ஜனதா கட்சியின் கடந்த 11 ஆண்டு கால ஆட்சியில், கல்வியிலும்,திட்டங்களிலும் சமஸ்கிருதத்தை வேகமாக புகுத்திவருவதை அறிவோம். தற்போது ராணுவத்தையும் சமஸ்கிருத மயமாக்கிக் கொண்டிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ராணுவ உணவு விடுதிகள், போர்க் கப்பலில் தங்குமிடங்கள், ராணுவ நிகழ்ச்சிகளில் கூட வீரர்களுக்கு என்று உடைக் கட்டுப்பாடுகள் இருந்தன. ஆனால், வட மாநில உடையான குர்தா பைஜாமாவை அணியலாம் என்று, 2023-இல் விதிகளைத் தளர்த்தியது பாதுகாப்புத்துறை. ராணுவ கல்வி நிறுவனங்களில் 'அர்த்தசாஸ்திரம்', 'பகவத் கீதை' ஆகியவை பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. ருத்ரா பிரிகேட்ஸ், பைரவ் கமாண்டோ யூனிட்ஸ், சக்திமான், திவ்யாஸ்த்ரா என பயிற்சி நிறுவனங்கள், படைப்பிரிவுகளுக்கும் சமஸ்கிருதப் பெயர் சூட்டுவிழாக்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

கப்பற்படையின் கொடியில் இருந்த செயின்ட் ஜார்ஜ் சிலுவை நீக்கப்பட்டு, சத்ரபதி சிவாஜியின் சின்னம் பொறிக்கப்பட்டது. பண்டைய கால போர்முறை, ராஜதந்திரங்கள், உத்திகளைப் பயன்படுத்தும் விதமாக சமஸ்கிருத மற்றும் பழைய புராணங்களைப் பயன்படுத்துவதற்காக 'உத்தவ்' என்ற புதிய முன்னெடுப்பை டெல்லியில் உள்ள, 'யுனைடெட் சர்வீஸ் திங் டேங்க்' தொடங்கியுள்ளது. காலனிய கால ஆடைக் கட்டுப்பாடுகள், டிரம் இசைக்குழுக்கள், வண்ண விளக்கக்காட்சிகள் மற்றும் பதவியேற்பு விழாக்களை மறுபரிசீலனை செய்யவும் திட்டமிட்டு வருகிறது ஒன்றிய அரசு. முஸ்லிம் மன்னர்களின் அடையாளம், காலனிய கால ஆட்சி நிர்வாக முறைகளை நீக்குகிறோம் என அதற்கு விளக்கம் கொடுக்கும் அதேவேளையில், ஆரிய மயமாக்கத்துக்கு மீண்டும் அழைத்துச் செல்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. மக்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



### "தலைவர் முன்னால் மோதிரம் மாற்றினோம்!"


திருவரங்கம் மு.கருணாநிதி

2018-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் தேதி, முத்தமிழறிஞர் அவர்களின் பிறந்த நாள் அன்று, எனக்கு திருமணம் நடைபெற்றது. அதற்கு, ஒரு மாதத்துக்கு முன்னர், நானும் எனது இணையர் ஹரிப்ரியா அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களை சந்தித்து, திருமண அழைப்பிதழ் அளித்து, அவர் முன்னால் மோதிரம் மாற்றிக் கொண்டோம். அன்றே பேராசிரியர் அவர்களையும் சந்தித்து வாழ்த்துப் பெற்றோம். மணவிழா முடித்து வந்ததும் தலைவரிடம் ஆசி வாங்கிச் சென்றேன். என் தாத்தா திருவரங்கம் க.இராசவேலு அவர்கள் நீதிக்கட்சி, திராவிடர் கழகம், பின்னர் கழகத்தின் தொடக்க கால செயல்பாட்டாளர். திருவரங்கத்தில் கழகம் வளர, பாடுபட்டவர். பேராசிரியர் அவர்கள் இதை தனது பேச்சில், குறிப்பிட்டது மறக்கமுடியாத நினைவு.

– திருவரங்கம் மு.கருணாநிதி,
இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்,
திருச்சி மத்திய மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---


**பொய்ப்பெட்டி**

கோவி.லெனின்

71

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

# ஓரவஞ்சனை ஒன்றிய அரசும் சாதனைத் தமிழ்நாடும்!




**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் எனும் 100 நாள் வேலைத் திட்டத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு, தி.மு.க. அரசு ஊதியம் கொடுக்காமல், ஊழல் செய்கிறது என்று எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டுகிறாரே?**

கொரோனா காலத்தில்கூட மக்களின் உயிரைப் பற்றி சிந்திக்காமல், ப்ளீச்சிங் பவுடர், பினாயில், விளக்குமாறு ஆகியவற்றை வாங்குவதில் ஊழல் செய்த எடப்பாடி பழனிசாமிக்கு, தி.மு.க. மீது குற்றம்சாட்டத் தகுதியில்லை என்பதுடன், 100 நாள் வேலைத் திட்டத்தில் அவர் வைக்கும் குற்றச்சாட்டும் உண்மையில்லை என்பதை, ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே புட்டுப்புட்டு வைக்கின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 85 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 1.09 கோடி பேர் இந்தத் திட்டத்தில் தொழிலாளர்களாகப் பதிவு செய்துள்ளனர். 86 சதவிகிதம் பேர் பெண்கள் ஆவர். நாட்டிலேயே நகரமயமான மாநிலங்களில் தமிழ்நாடு முன்னோடியாக இருந்தாலும், கிராமங்களுக்கும் சீரான வளர்ச்சி வேண்டும் என்ற அடிப்படையிலும், அங்குள்ளவர்களுக்கும் தொடர்ச்சியான வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட வேண்டும் என்ற கண்ணோட்டத்திலும், 100 நாள் வேலைத் திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப் பட்டு வருகிறது. குறிப்பாக, 27 சதவிகிதம் பட்டியல் இன மக்களும், 2 சதவிகிதம் பழங்குடி இனத்தவரும், ஒரு லட்சம் மாற்றுத் திறனாளிகளும் இந்தத் திட்டத்தில் தொழிலாளர்களாக இருந்து ஊதியம் பெற்று வருகின்றனர்.

2021-ஆம் ஆண்டு முதல் 2025-ஆம் ஆண்டுவரையிலான நான்காண்டுகளில் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய தொகை முழுமையாகவும், கூடுதலாகவும் செயல்படுத்தப்பட்டிருப்பதையும், இதன் மூலமாக திட்டமிடப்பட்ட பணிகளில் சராசரியாக 95 சதவிகிதம் பணிகள் தமிழ்நாட்டில் நிறைவடைந்திருப்பதையும் இத்திட்டத்திற்கான துறை வெளியிட்டுள்ள புள்ளி விவரமே தெரிவிக்கிறது. கடந்த நான்காண்டுகளில் உத்தரப் பிரதேசம், பீகார், ஜார்கண்ட் போன்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள், செலவிடப்பட்டுள்ள தொகை, அதன் பயனாளிகள், அவர்களுக்கான வேலை நாட்கள், மனிதசக்தி நாட்கள் உருவாக்கம் என அனைத்திலும் நமது மாநிலம் சிறப்பாக உள்ளது.

ஆனால், இதில் ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்பு பாரபட்சமாக இருப்பதையும், நிலுவைத் தொகையான 1,056 கோடி ரூபாயை விடுவிக்கக் கோரி, முதலமைச்சர் கடிதம் எழுதி, நிதியமைச்சர் டெல்லிக்குச் சென்று வலியுறுத்தி, தி.மு.க. சார்பில் போராட்டம் நடத்தி அதன்பிறகே ஒரு பகுதி தொகை விடுவிக்கப்பட்டதையும் மறுக்கமுடியாது. அதுமட்டுமின்றி, கடந்த 5 ஆண்டுகளில் 100 நாள் வேலைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீடு சரிந்துள்ளதை, ஒன்றிய ஊரக மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் கமலேஷ் பஸ்வான் நாடாளுமன்றத்தில் எழுத்து மூலமான பதிலில் ஒப்புக் கொண்டுள்ளார்.

எடப்பாடி பழனிசாமி குரலை உயர்த்த வேண்டியது, ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க.வை நோக்கித்தான். உயர்த்துவாரா? முடியுமா?

"எடப்பாடி பழனிசாமி குரலை உயர்த்த வேண்டியது, ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க.வை நோக்கித்தான். உயர்த்துவாரா? முடியுமா?"

...வினா தொடரும்.

## மலரும் நினைவுகள்

### செல்வந்தர்களை எதிர்த்துப் போட்டி!

1957-ஆம் ஆண்டு தேர்தலைச் சந்திக்க கழகத் தோழர்கள் சிறுதொகையாகத் திரட்டி அளித்த நன்கொடை ரூ.70,000 மட்டுமே தி.மு.க. தேர்தல் நிதியாகத் திரண்டது. இந்தச் சிறு தொகையை வைத்துக்கொண்டு, தேர்தலைச் சந்தித்து, மகத்தான காரியத்தில் ஈடுபட்டது. பல இடங்களில் பலமுனைப் போட்டி. பல இடங்களில் மிகப் பெரிய செல்வந்தர்களோடும் தி.மு.க. வேட்பாளர்கள் போட்டிபோட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131